Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

## சண்முகா கல்லூரியில்
## தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு

திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்துடன் திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி இணைந்து தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு நடத்தியது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமிகு க.சு.கந்தசாமி, **IAS** கலந்து கொண்டு கண்காட்சியைத் தொடங்கி வைத்து தலைமை உரையாற்றினார். வாய்ப்புகள் வரும்போது சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதோடு, இனிவரும் காலங்களில் போட்டித் தேர்வுகள் வழியாகவே அரசுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது இருக்கும் என்றும் குறிப்பிட்டு, அத்தகைய சூழலுக்கெல்லாம் மாணவர்கள் தயாராகி, வேலைவாய்ப்பினைப் பெறுவதற்குத் தங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் பல்வேறு சான்றுகளைக் காட்டி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். திருவண்ணாமலை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் செல்வி. லோ.லோகலட்சுமி வரவேற்புரையாற்றினார்.

கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி,** பொருளாளர் **கோ.இராஜேந்திரகுமார்,** சென்னை மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) திருமதி.**வே.மீனாட்சி** ஆகியோரின் வாழ்த்துகளோடு நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **என்.குமார்** முன்னிலை வகித்தார். முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** வாழ்த்துரை வழங்கினார். இந்நதிகழ்ச்சியில் பல்வேறு தலைப்புகளில் இராஜா போட்டித் தேர்வுகள் பயிற்சி மைய நிறுவனர் **கே.பாரதி,** வட்டாட்சியர் அலுவலக இளநிலை உதவியாளர் திருமதி **டி.விஜயா,** மாவட்ட தொழில் மைய உதவிப் பொறியாளர் **நாகராஜன்,** கல்லூரியின் கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** உள்ளிட்டோர் கருத்துரைகள் வழங்கினர். இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் **த. மோகன்ராஜ்** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார். இக்கருத்தரங்கை முன்னிட்டு பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பரிசளித்தார். இக்கருத்தரங்கில் மாணவ, மாணவியர் திரளாக கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

தாளாளர்

Scanned by CamScanner


திருவண்ணாமலை மாவட்டம்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்
திருவண்ணாமலை
மற்றும்
சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவண்ணாமலை.
தொழில்நெறி
கண்காட்சி
SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
THIRUVANNAMALAI